**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர்.**

**முன்னிலை : செல்வி.ஆர்.ஸ்ரீநிதி.B.A., L.L.B.(Hons), L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1**
**கடலூர்.**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ஆம் நாள் வெள்ளிகிழமை
திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி 13-ம் நாள்
CNR. No. TNCD06-010786-2022
ஆண்டுபட்டிகை வழக்கு எண். 344/2022

**(As occurrence and filing of this case was before 01.07.2024, the provisions of BNS and BNSS is not applicable in this case)**

அரசுக்காக, உதவி ஆய்வாளர்
நெல்லிக்குப்பம் காவல் நிலையம்
குற்ற எண். 834/2021

....குற்றமுறையிடுபவர்

-- எதிர் --

பாரதி (வயது-25)
த/பெ. பாஸ்கர் ....எதிரி

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட**
**R.O.C.No. 814/2020/RG/F1 (P.Dis.No. 36/2021) உத்தரவு மற்றும் Rule 106 Cr.R.P.-ன்படி**
**CASE SUMMARY**

| | | | |
|---|---|---|---|
| i) The Period of Remand of the Accused: | Date of Remand | Date of surrender | Released on Station Bail |
| | -- | -- | 07.12.2021 |
| ii) Date of filing of the | Filing of complaint | Filing of Final Report | |

| | | | |
|---|---|---|---|
| Complaint / Final report in the Court | 03.12.2021 | 23.12.2021 | |
| iii) The date of questioning of the Accused U/s.240 of the Code of Criminal Procedure, 1973 | 15.10.2022 | | |
| v) Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts except routine petitions like petitions U/s. 317 of the Code | Crl.M.P.No. | Date of Filing | Result |
| | - | - | - |
| v) Date of examination in-chief and cross-examination of a witness | Name of the Witness | Date of Chief | Date of Cross |
| | 1.திரு. ஜெயக்குமார் | 22.08.2024 | 22.08.2024 |
| | 2.திரு. தட்சணாமூர்த்தி | 22.08.2024 | 22.08.2024 |
| | 3.திரு. வெங்கடேசன் | 23.06.2025 | 23.06.2025 |
| | 4.திரு. சுரேஷ் | 23.06.2025 | 23.06.2025 |
| | 5.திரு. பழனிசாமி | 23.06.2025 | 23.06.2025 |
| | 6.திரு. சரத்பாபு | 23.06.2025 | 23.06.2025 |
| | 7.திரு. கமல் | 14.10.2025 | 14.10.2025 |
| | 8. திரு. சந்தோஷ்குமார் | 03.11.2025 | 03.11.2025 |
| | 9.திரு. கலியன் (சிறப்பு உதவி ஆய்வாளர்) | 17.11.2025 | 17.11.2025 |
| | 10.திரு. அசோகன் (காவல் ஆய்வாளர்) | 05.03.2026 | 05.03.2026 |

| | |
|---|---|
| vi) Date of examination of the Accused U/s.313(1)(b) Cr.P.C. | 10.03.2026 |
| vii) Details of abscondence of an Accused and his appearance / production, as the case may be; and | Nil |
| viii) Grant of stay by superior Courts and the results there of: | Nil |

இவ்வழக்கானது 17.08.2022-ந் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 27.03.2026-ந் தேதி இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் திருமதி.நிவேதா அவர்களும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர திரு.M.சுப்பையாதுல்லா அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

கடந்த 03.12.2021 ந் தேதி 14.15 மணிக்கு இறந்துபோன ராஜவேல் (எ) சந்திரசேகரன் என்பவர் PY-01-CP-7057 என்ற பதிவெண்கொண்ட Suzuki Access 125 மோட்டார் சைக்கிளில் சாட்சி-2 தட்சணாமூர்த்தி என்பவரை பின்னால் உட்கார வைத்து கொண்டும் தெற்கிலிருந்து வடக்காக மெயின்ரோட்டை கடப்பதற்காக ரோட்டின் சென்டர் மீடியன் அருகே மோட்டார் சைக்கிளில் இண்டிகேட்டர் போட்டு நின்று கொண்டிருந்த போது எதிரி PY-01-AU-1220 என்ற Apache மோட்டார் சைக்கிளை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண் அடிக்காமலும் ஓட்டி வந்து இறந்துபோன ராஜவேல் (எ) சந்திரசேகரன் மோட்டார் சைக்கிளில் மீது மோதி சந்திரசேகரனுக்கு தலை மற்றும் வலது கால் முட்டியிலும், காயத்தை உண்டுபண்ணி இறப்பை ஏற்படுத்தியும், பின்னால் உட்காரந்து இருந்த சாட்சி-2க்கு முன்பக்க தலை மற்று வலது கால் முட்டி வலது கை மணிகட்டு ஆகிய இடங்களில் சொற்பகாயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார்

என்று நெல்லிக்குப்பம் காவல் நிலைய ஆய்வாளர் எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 279, 337, 304(A) IPC -ன் படி குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207-ன்படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

4) **குற்றச்சாட்டு** :-

எதிரிக்கு போதிய கால அவகாசம் அளிக்கப்பட்டு எதிரியிடம் அவர் மீதான குற்றம் குறித்து வினவியபோது எதிரி தன் குற்றத்தை மறுத்தார். எதிரி தன் குற்றத்தை மறுக்கவே வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றங்களுக்கு போதுமான ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, எதிரியிடம் இதச பிரிவுகள் 279, 304அ -ன் கீழ், குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு தமிழில் படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி அல்ல என கூறினார்.

5) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 17 வரையான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் சாட்சியாரும் விசாரிக்கப்படவில்லை.

6) **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

**புகார்தாரரான (அ.சா.1) தன்னுடைய முதன்மை விசாரணை சாட்சியத்தில்,** கடந்த 3.12.2021ம் தேதி எனது தந்தை வீட்டிற்கு மரவேலைக்காக மரஜாமான் வாங்குதற்கு எங்கள் ஊரைச்சேர்ந்த தட்சிணாமூர்த்தி என்பவரை எனது தந்தை சுசிகி இருசக்கர வாகனத்தில் அழைத்துக்கொண்டு மேல்பட்டாம்பாக்கத்தில் உள்ள பாலாஜி மரவாடிக்கு சென்றுவிட்டு பகல் சுமார் 1.30 மணியளவில் வீட்டிற்கு திரும்ப வரும்போது மரவாடிக்கு எதிரே அந்த வழியாக வந்த அப்பாச்சி இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு என் தந்தைக்கும் மற்றும் தட்சிணாமூர்த்திக்கும்

அடிப்பட்டுள்ளதாக சம்பவத்தை பார்த்த அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். நான் உடனே கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவர்கள் என் தந்தை வரும் வழியிலேயே இறந்துவிட்டாக கூறினார்கள். இது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் காவல்நிலையத்தில் புகார் மனு (அ.சா.ஆ.1) அளித்தேன் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். மறு நாள் போலிசார் பிரேத விசாரணை செய்யும்போது நான் உடனிருந்தேன் அப்போதும் என்னை மறு விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

7) **வழக்கு சம்பவத்தில் காயமுற்ற சாட்சியான (அ.சா.2) தனது சாட்சியத்தில்**, கடந்த 2 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை. பகல் சுமார் 2 மணியளவில் நானும் சந்திரகேரன் என்பவரும் அவருடைய இருசக்கர வாகனத்தில் பாலாஜி மரவாடிக்கு மரம் வாங்குவதற்காக சென்றோம். நாங்கள் ரோட்டை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதி எங்கள் இருவருக்கும் அடிப்பட்டு கீழே விழுந்து விட்டோம். அதன் பிறகு எனக்கு சுயநினைவு இல்லை. மருத்துவமனையில் நான் மறு நாள் கண் விழித்தபோது தான் என்னுடன் வந்த சந்திரசேகரன் இறந்துவிட்டார் என்பது எனக்கு தெரிய வந்தது. எனக்கு தலை, இடது கால், இடது தோள் பட்டை ஆகிய இடங்களில் பலத்த அடிப்பட்டது. இதனால் எனது இடது காது கேட்கும் திறனை இழந்துவிட்டது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான் சுயநினைவு இன்றி இருந்ததால் யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8) **வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான (அ.சா.3) தனது சாட்சியத்தில்,** சுமார் 3 ½ வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் , வருடம் சரியாக ஞாபகம் இல்லை. பகல் 1.30 அல்லது 1.45 மணியளவில் நான் பெயிண்ட் வாங்குவதற்காக கடைத்தெருவிற்கு சென்றிருந்தபோது மேல்பட்டாம்பாக்கம் பாலாஜி மரவாடிக்கு எதிரே ரோட்டில் கூட்டமாக நின்றிருந்தார்கள். நான் என்னவென்று இறங்கி பார்த்தபோது எங்கள் ஊரைச்சேர்ந்த ராஜவேல் என்கிற சந்திரசேகரன் அடிப்பட்டு கிடந்தார். அவரை நான் தட்டி எழுப்பி பார்த்தேன். அவரது காது, மூக்கு ஆகியவற்றில் இரத்தம் வந்துகொண்டு

இருந்தது அப்போது என் அண்ணன் தட்சிணாமூர்த்தியும் அங்கு நின்று கொண்டு இருந்தார். அவருக்கும் அடிப்பட்டு இருந்தது. அவரை நான் விசாரித்தபோது சந்திரசேகருடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்ததாகவும், ரோட்டில் திரும்பும்போது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் கூறினார். அதன் பிறகு அடிப்பட்ட சந்திரசேகரனின் உறவினர்களுக்கு இது சம்பந்தமாக தகவல் கூறிவிட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அடிப்பட்ட இருவரையும் மற்றும் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களையும் அதே ஆம்புலன்சில் கடலூர் அரசு மருத்துவைனைக்கு அழைத்து சென்றேன். ஆஜர் எதிரி மற்றும் மற்றொரு நபர் தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தில் வந்த அடிப்பட்ட நபர்களாவார்கள். எதிரிக்கும் நன்கு அடிப்பட்டு இருந்தது. மருத்துவமனை சென்று அடிப்பட்ட நபர்களை சோதித்தபோது சந்திரசேகரன் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் கூறினார்கள். மறு நாள் பிரேத பரிசோதனை செய்தார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9) **பிரேத விசாரணை சாட்சியான சுரேஷ் (அ.சா.4) தனது சாட்சியத்தில்,** கடந்த 3.12.2021ம் தேதி நான் பாண்டிச்சேரியில் இருக்கும்போது வெங்கடேசன் என்பவரும் ஜெயச்சந்திரன் என்பவரும் எனக்கு போன் செய்து எனது அப்பா மேல்பட்டாம்பாக்கம் பாலாஜி மரவாடி எதிரே விபத்தில் அடிப்பட்டதாக தகவல் கூறினார்கள். அவரை மருத்துவமனைக்கு அழைத்து வருவதாக கூறினார்கள். உடனே நான் உடன் புறப்பட்டு கடலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தேன். நான் வந்து பார்த்தபோது என் தந்தை இறந்துவிட்டதாக கூறினார்கள். போலிசார் மறு நாள் பிரேத விசாரணை செய்யும் போது நானும் உடன் இருந்தேன். என்னையும் விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10) **மற்றொரு பிரேத விசாரணை சாட்சியான (அ.சா.5) தனது சாட்சியத்தில்,** கடந்த 2 அல்லது 3 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் சரியாக ஞாபகம் இல்லை. எனது சகலை சந்திரசேகரன் விபத்தில் அடிப்பட்டு இறந்துபோய் விட்டார் என்று கேள்விபட்டு மருத்துவமனை சென்று பார்த்தேன். போலிசார் மறு நாள் பிரேத விசாரணை செய்தார்கள். நானும் உடனிருந்தேன். என்னையும் விசாரணை செய்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11) பார்வை மகசர் சாட்சியான சரத்பாபு (அ.சா.6) தனது சாட்சியத்தில்,** கடந்த 3.12.2021ம் தேதி இரவு சுமார் 8.30 மணியளவில் மேல்பட்டாம்பாக்கம் பாலாஜி மரவாடிக்கு எதிரே விபத்து நடந்தது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் போலிசார் அங்கு விசாரணை செய்து அந்த இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும் சங்கர் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். மேற்படி சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**12) வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான கமல் (அ.சா.7) தனது சாட்சியத்தில்,** கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் மதியம் சாப்பிட வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது என் கடைக்கு எதிரே விபத்து நடந்ததாக கூறினார்கள். கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த நபர் அடிப்பட்டுவிட்டதாக கூறினார்கள். யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று நான்கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான்அவர்களிடம் சம்பவத்தை பார்க்கவில்லை என்று கூறியிருந்தேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**13) வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியான சந்தோஷ்குமார் (அ.சா.8) தனது சாட்சியத்தில்,** சுமார் 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு மரம் இழைப்பதற்காக நான் பட்டாம்பாக்கத்தில் உள்ள மரவாடிக்கு அருகே இருக்கும் மர இழைப்பகத்திற்கு சென்றிருந்தேன். அந்த இழைப்பகத்தின் பெயர் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் பேசி கொண்டார்கள். நான் அதன் பிறகு வீட்டிற்கு வந்துவிட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். நான்எனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டு வந்துவிட்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**14) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கலியன் (அ.சா.9) தனது சாட்சியத்தில்,** கடந்த 03.12.2021ம் தேதி நெல்லிக்குப்பம் காவல்

நிலையத்தில் தலைமை காவலராக நிலைய பொறுப்பில் இருந்தபோது அன்றையதினம் இரவு 7.30 மணியளவில் கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த சந்திரசேகரன் மகன் ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.834/2021-ல் சட்டப்பிரிவுகள் 279, 337, 304A இதசவின் படி வழக்கு பதிவு செய்து கணினி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 தயார் செய்து, பின்னர் வழக்கினை மேல் விசாரணை செய்ய வேண்டி வழக்கின் கோப்பினை வட்ட காவல் ஆய்வளர் பார்வைக்கு வைத்தேன். மறுநாள் காலை ஆய்வாளர் பிரேத விசாரணை செய்வதற்கு அவருடன் கடலூர் அரசு மருத்துவமனை சென்று இறந்துபோன ராஜவேல் என்ற சந்திரசேகரன் என்பவரின் பிரேதத்தினை அடையாளம் காட்டி பிரேத விசாரணைக்கு உதவியாக இருந்தேன். அதன் பிறகு ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தினை மருத்துவரிடம் அளித்து இறந்துபோன ராஜவேல் (எ) சந்திரசேகரின் உடலினை அடையாளம் காட்டி சடலகூறாய்வுக்கு உதவியாக இருந்து சடலகூறாய்வு முடிந்த உடன் உரிய நடைமுறைக்கு பின் மேற்படி பிரேதத்தினை அவரது உறவினர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னையும் விசாரணை செய்தார் என்று அளித்துள்ளார்.

15) **புலன் விசாரணை அதிகாரியான காவல் ஆய்வாளர் திரு.அசோகன் (அ.சா.10) தனது சாட்சியத்தில்,** கடந்த 03.12.2021 தேதி நான் நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் நிலைய பொருப்பில் இருந்த தலைமை காவலர் திரு. கலியன் என்பவரிடம் கொங்கராயனூர் கிராமம், வேல் கோவில் தெருவைச் சேர்ந்த சந்திரசேகரன் மகன் ஜெயக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அன்றை தினம் மாலை 19.30 மணியளவில் புகார் மனுவை பெற்று புகார் மனுவின் பேரில் நெல்லிக்குப்பம் காவல் நிலைய குற்ற எண். 834/2021 சட்டப்பிரிவுகள் 279, 337, 304 அ இதசவின் படி வழக்கு பதிவு செய்து வழக்கின் கோப்பினை எனது பார்வைக்கு வைத்த அன்றைய தினேமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கரன் மற்றும் சரத்பாபு ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.4 வரைந்து பார்வை மகசர் தயார் செய்து, அந்த பார்வை மகசரில் சம்பயிடத்திலேயே சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் சாட்சிகள் ஜெயக்குமார், தட்சிணாமூர்த்தி,

தனசேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான கமல் மற்றும் சந்தோஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் 04.12.2021 ம் தேதி பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகளுக்கு சம்மன் வைத்து காலை 8.00 மணியளவில் கடலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று தலைமை காவலர் கலியன் உதவியுடன் இறந்து போன சந்திரசேகரன் என்பவரது பிரேதத்தினை சாட்சிகள் முன்னிலையில் பிரேதவிசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ 5** தயார் செய்து, பின்னர் இறந்துபோன சந்திரசேகரன் என்பவரின் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு சடலகூறாய்வு செய்யவேண்டி தலைமை காவலர் கலியன் மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் வைத்து சடலகூறாய்வு முடிந்தவுடன் உரிய நடைமுறைக்கு பின் சந்திரசேகரன் பிரேதத்தினை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க அறிவுறை வழங்கி, பிரேத விசாரணை சாட்சிகள் சுரேஷ், பழனிசாமி, கருணாநிதி, குமாரஜோதி ஆகியோர்களை தனித்தனியா விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட தட்சிணாமூர்த்தி என்பவரை கடலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு போய் சேர்த்த சாட்சி வெங்கடேசனை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் 07.12.2021ம் தேதி இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய எதிரி பாரதி என்பவர் தாமாக நிலையம் ஆஜரானவரை காலை 11.00 மணிக்கு காரணம் கூறி கைது செய்து திரேக பரிசோதனை செய்து உரிய நடைமுறைக்கு பின் உரிய பாரா காவல் வசம் ஒப்படைத்து உரிய நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டது. பின்னர் 16.12.2021 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட PY-01-CP-7057 என்ற பதிவெண்கொண்ட சுசுகி ஆக்சஸ் 125 இரு சக்கர வாகனத்தையும் மற்றும் 22.12.2021 ம் தேதி விபத்து ஏற்படுத்திய வாகனமான PY-01-AU-1220 என்ற பதிவெண்கொண்ட அப்பாச்சி இரு சக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி வைத்ததாகவும், 23.12.2021 ம் தேதி மேற்படி வாகனங்களுக்கான ஆய்வறிக்கைகள் பெற்று ஆய்வு செய்த பண்ருட்டி மோட்டார் வாகன ஆய்வாளர் ரவிச்சந்திரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து மேற்படி இரண்டு வாகனங்களுக்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ. 6 மற்றும் 7 பெற்று, பின்னர் 04.12.2021 ம் தேதி இவ்வழக்கில் இறந்த சந்திரசேகரன் என்பவரை பரிசோதனை செய்து இறந்துவிட்டதை உறுதி

செய்து விபத்து பதிவேட்டில் பதிவு செய்தும் மற்றும் வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட தட்சிணாமூர்த்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வினோத் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று இறந்துபோன சந்திரசேகரன் என்பவருக்கான விபத்து பதிவேடு அறிக்கை அ.சா.ஆ. 8 பெற்றும் மேற்படி வழக்கு சம்பவத்தில் அடிப்பட்ட தட்சிணாமூர்த்தி என்பவரின் காயச்சாசன்றிதழ் அ.சா.ஆ.9 பெற்று, பின்னர் மேற்படி இறந்த சந்திரசேகரன் என்பவரின் பிரேதத்தை பிணகூறாய்வு செய்த கடலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் கலையரசி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிணக்கூறாய்வு சான்று அ.சா.ஆ.10 பெற்று, பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தும் மற்றும் பிரேத விசாரணைக்கு உதவியாக இருந்த தலைமை காவலர் திரு. கலியன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து அத்துடன் என் புலன் விசாரணையை முடித்து வழக்கின் கோப்பிணை பார்வையிட்டு அன்றைய தினமே ஆஜர் எதிரி மீது 279, 337, 304-அ இதசவின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன் தயார் செய்து தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

16) இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

17) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

18) **விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து எதிரி மீதான குற்றம் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**19) தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

**20)** இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

**21)** இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1, முதல் விசாரணையில், 03.12.2021 ந் தேதி எனது தந்தை வீட்டிற்கு மரவேலைக்காக மர ஜாமான்கள் வாங்குவதற்கு எங்கள் ஊரைச் சேர்ந்த தட்சிணாமூர்த்தி என்பவரை இருசக்கர வாகனத்தில் அழைத்துகொண்டு மேல்பட்டாம்பாக்கத்தில் உள்ள பாலாஜி மரவாடிக்கு சென்றுவிட்டு பகல் சுமார் 1.30 மணியளவில் வீட்டிற்கு திரும்ப வரும்போது மரவாடிக்கு எதிரே வந்த இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு என் தந்தைக்கும், தட்சிணாமூர்த்திக்கும் அடிப்பட்டுள்ளதாக சம்பவத்தை நேரில் பார்த்த அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். கடலூர் அரசு மருத்துமவனை சென்றபோது மருத்துவர்கள் என் தந்தை வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக கூறினார்கள். நெல்லிக்குப்பம் காவல் நிலையத்தில் புகார் மனு (அ.சா.ஆ.1) அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

அ.சா.1ன் சாட்சியத்தை கண்ணுறும்போது, அப்பாச்சி இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு என் தந்தைந்தைக்கும், தட்சிணாமூர்த்திக்கும் அடிப்பட்டதாக அருகில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள் கூறியுள்ளதிலிருந்து, அ.சா.1 வழக்கு சம்பவத்தை கேள்விபட்டு தான் சம்பவயிடதிற்கு சென்றுள்ளார் என்று தெரிகிறது. எனவே அ.சா.1 வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல. கேள்விபட்ட சாட்சி என்றும் தெரியவருகிறது.

**22)** வழக்கு சம்பவத்தில் காயமுற்ற சாட்சியான தட்சிணாமூர்த்தி (அ.சா.2), கடந்த 2 வருடங்களுக்கு முன்பு பகல் சுமார் 2 மணியளவில் சந்திரசேகரன் என்பவர் இருசக்கர

வாகனத்தில் பாலாஜி மரவாடிக்கு மரம் வாங்குவதற்காக சென்று, ரோட்டை கடப்பதற்காக நின்றுகொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த இருசக்கர வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதி இருவரும் அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டோம். யார் வாகனத்தை ஓட்டி வந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்று கூறியுள்ளார்.

அ.சா.2ன் சாட்சியத்தை கண்ணுறும்போது, அந்த வழியாக வந்த இருசக்கர வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதியது என்று கூறியுள்ளாரே தவிர, ஆஜர் எதிரி தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மோதினார் என்று கூறவில்லை. மேலும் அ.சா.1 வானத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்று நான் பாரக்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**23)** வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.7, கடந்த 5 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சாப்பிட வீட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது என் கடைக்கு எதிரே விபத்த நடந்ததாக கூறினார்கள். கொங்கராயனூர் கிராமத்தை சேர்ந்த நபர் அடிப்பட்டுவிட்டதாக கூறினார்கள். யார் விபத்தை ஏற்படுத்தினார்கள் என்று நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள் சம்பவத்தை பார்க்கவில்ல என்று கூறினேன். வழக்க சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போதும் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**24)** மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.8, 3 வருடங்களுக்கு முன்பு பட்டாம்பாக்கத்தில் உள்ள மரவாடிக்கு அருகே இருக்கும் மர இழைப்பகத்திற்கு சென்றிருந்தபோது, அந்தயிடத்தில் விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் பேசி கொண்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிட்டு வந்துவிட்டேன் என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். அரசுத்தரப்பு குறுக்கு விசாரணையின்போதும் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

**25)** அ.சா.3 தனது சாட்சியத்தில், சுமார் 3 1/2 வருடத்திற்கு முன்பு மேல்பட்டாம்பாக்கம் பாலாஜி மரவாடிக்கு எதிரே ரோட்டில் கூட்டமாக நின்றிருந்தார்கள். நான் என்னவென்று இறங்கி பார்த்தபோது எங்கள்

ஊரைச்சேர்ந்த ராஜவேல் (எ) சந்திரசேகரன் அடிப்பட்டு கிடந்தார். தட்சிணாமூர்த்தியும் அடிப்பட்டு அங்கு நின்று கொண்டிருந்தார். அவரை விசாரித்தபோது சந்திரசேகருடன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்தபோது ரோட்டில் திரும்பும்போது இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார். எதிரிக்கும் நன்கு அடிப்பட்டு இருந்தது என்று கூறியுள்ளார்.

அ.சா.3ன் சாட்சியத்தை கண்ணுறும்போது, பாலாஜி மரவாடிக்கு எதிரே ரோட்டில் கூட்டமாக நின்றிருந்தார்கள். என்னவென்று இறங்கி பார்த்தபோது ராஜவேல் (எ) சந்திரசேகரன் அடிப்பட்டு கிடந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளதிலிருந்து, விபத்து ஏற்பட்டு கூட்டமாக இருப்பதை கண்டு பார்க்கும்போது தான் ராஜவேல் (எ) சந்திரசேகரன் மற்றும் தட்சிணாமூர்த்தி விபத்தில் அடிப்பட்டிருப்பது அ.சா.3க்கு தெரியவருகிறது. இதிலிருந்து, அ.சா.3 விபத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல என்று தெரியவருகிறது.

**26)** பிரேத விசாரணையின்போது உடனிருந்த சாட்சியான அ.சா.4 மற்றும் அ.சா.5, விபத்தை கேள்விபட்டு மருத்துவமனைக்கு வந்து பிரேத விசாரணை செய்யும்போது, நான் உடனிருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

**27)** பார்வை மகசர் சாட்சியான அ.சா.6, மேல்பட்டாம்பாக்கம் பாலாஜி மரவாடிக்கு எதிரே விபத்து நடந்தது சம்பந்தமாக நெல்லிக்குப்பம் போலிசார் அங்கு விசாரணை செய்து அந்தயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார்கள். அதில் நானும், சங்கர் என்பவரும் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**28)** சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கலியன் (அ.சா.9), முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்து, பின்னர் மேல்விசாரணைக்காக வழக்கின் கோப்பினை காவல் ஆய்வாளர் திரு.அசோகன் (அ.சா.10) ன் பார்வைக்கு வைத்த, வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்ட காவல் ஆய்வாளர், மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) மற்றும் பிரேத விசாரணை அறிக்கை (அ.சா.ஆ.5), மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் (அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7), விபத்து பதிவேடு ஆய்வறிக்கை (அ.சா.ஆ.8), அ.சா.2க்கான காயச்சாசன்றிதழ் (அ.சா.ஆ.9) மற்றும் சடலக்கூறாய்வு

அறிக்கை (அ.சா.ஆ.10) பெற்று வந்து, எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சி அளித்துள்ளார்.

**29)** இவ்வழக்கின் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை கண்ணுறும் போது, இவ்வழக்கின் எதிரி தான் PY-01-AU-1220 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, இறந்துபோன ராஜவேல் (எ) சந்திசேகரன் என்பவர் மீது மோதி இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கும் பொழுது,

**30)** இவ்வழக்கில் புகார்ததாரரான அ.சா.1 அளித்துள்ள சாட்சியத்திலிருந்து, அ.சா.1 வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சி அல்ல, கேள்விப்பட்ட சாட்சி என்று தெரிகிறது. கண்ணுற்ற சாட்சி என்று அரசுத்தரப்பில் சொல்லப்படும் அ.சா.7 மற்றும் அ.சா.8 வழக்கு சம்பந்தமான எங்களுக்கு எதுவும் தெரியாது என்று அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக மாறியுள்ளார். வழக்கு சம்பவத்தில் காயமுற்ற சாட்சியான அ.சா.2 இருசக்கர வாகனம் மோதி அடிப்பட்டது என்று கூறியுள்ளாரே தவிர, ஆஜர் எதிரி தான் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரண்அடிக்காமலும் ஒட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று கூறவில்லை. மேலும் யார் வாகனத்தை ஓட்டிவந்தார் என்று பார்க்கவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3 ன் சாட்சியத்திலிருந்து அ.சா.3ம் கண்ணுற்ற சாட்சி அல்ல என்று தெரியவருகிறது.

**31)** மேலும், இவ்வழக்கில் இறந்தபோன சந்திரசேகரன் என்பவர் அன்றைய தினம் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறந்துள்ளார் என்று ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த காயங்கள் அவருக்கு ஏற்பட்ட விபத்தினால் ஏற்பட்டது என்று நிரூபிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்த விபத்து எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஏற்படுத்தப்பட்டதா என்று பார்க்கும் பொழுது, அ.சா.1 கேள்வி நிலை சாட்சி என்பதாலும், காயமுற்ற சாட்சியான அ.சா.2 ஆஜர் எதிரி தான் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாவும் ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளிக்காத நிலையிலும்,

எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்காத சூழ்நிலையிலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 மற்றும், அ.சா.7 அரசுத்தரப்பில் பிறழ்சாட்சிகளாக மாறியுள்ள சூழ்நிலையிலும், அ.சா.3ம் விபத்து ஏற்பட்டு, கூட்டமாக இருந்தபோது தான் அ.சா.3க்கும் விபத்து ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருவதாலும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் யாரும் இல்லாத சூழ்நிலையில், எதிரி PY-01-AU-1220 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தை கவனக்குறைவான மற்றும் அதிவேகமாக ஓட்டி வந்ததால் விபத்து ஏற்பட்டது என்று சாட்சிகள் மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்படாததால், எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**32)** முடிவாக, இவ்வழக்கில் எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 337, 304 அ-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**33)** எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

**34)** இவ்வழக்கில் வழக்கு சொத்து ஏதும் இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 27.03.2026-ந் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.03.27 17:44:08 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

அசா.1 திரு. ஜெயக்குமார்

அசா.2 திரு. தட்சிணாமூர்த்தி

அசா.3 திரு. வெங்கடேசன்

அசா.4 திரு. சுரேஷ்

அசா.5 திரு. பழனிசாமி

அசா.6 திரு. சரத்பாபு

அசா.7 திரு. கமல்

அசா.8 திரு. சந்தோஷ்குமார்

அசா.9 திரு. கலியன் (சிறப்பு உதவி ஆய்வாளர்)

அசா.10 திரு. அசோகன் (காவல் ஆய்வாளர்)

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அசாஆ.1 | 03.12.2021 | புகார் மனு |
| அசாஆ.2 | 03.12.2021 | அ.சா.6ன் கையொப்பத்துடன் கூடிய பார்வை மகசர் |
| அசாஆ.3 | 03.12.2021 | கணினி முதல் தகவல் அறிக்கை |
| அசாஆ.4 | 03.12.2021 | மாதிரி வரைபடம் |
| அசாஆ.5 | 04.12.2021 | பிரேத விசாரணை அறிக்கை |
| அசாஆ.6 | 16.12.2021 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (PY-01-CP-7057) |
| அசாஆ.7 | 22.12.2021 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (PY-01-AU-1220) |
| அசாஆ.8 | 03.12.2021 | விபத்து பதிவேடு |
| அசாஆ.9 | 03.12.2021 | அ.சா.2க்கான காயச்சான்றிதழ் |
| அசாஆ.10 | 04.12.2021 | சடலக்கூறாய்வு ஆய்வறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள் - இல்லை**

**எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்றுபொருள் - இல்லை**

SRINITHI R

Digitally signed by SRINITHI R
Date: 2026.03.27 17:44:00 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

கடலூர்.

**குறிப்பு**

1. விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2. எந்தவொரு சாட்சியும் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை

**நகல்**

1. மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர், கடலூர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.